மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கும் விவரங்கள் இங்கே இல்லையென்ருலும்கூட, இதை மட்டும் சொல்லிக்கொள்ளுவேன். இரண்டு மூன்று விதமான நோய்களுக்குப் பயன்படும் மருந்துகளை எந்தெந்த நோய்களுக்கு எந்தெந்த மருந்துகள் எந்த அளவு பயன்படுகிறது என்று ஒவ்வொரு ஆராய்ச்சித் துறையிலும் பரிசீலித்து வருகின்ருர்கள்.

Tiruppur Banian Factories.

* 139 *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the workers of the Tiruppur Banian Factories have gone on strike during February, 1972; and

(*b*) if so, the reasons therefor ?

திருப்பூர் பனியன் தொழிற்சாலைகள்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருப்பூர் பனியன் தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் 1972 பிப்ரவரியில் வேலை நிறுத்தம் செய்தனரா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) ஊதியங்களைத் திருத்தி அமைத்தல், வேலைச் சுமை முடிவு செய்தல் போன்ற தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிர்வாகத்தினரால் மனநிறைவளிக்கும் வகையில் தீர்க்கப்படாததால், அவர்கள் வேலைநிறுத்தம் செய்யத் தொடங்கினர்.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, எந்த வகையில் இதில் தீர்வு காணப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் 1947-ம் ஆண்டு தொழிற்சாலைத் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் உடன்பாடு ஒன்று 18—3—1972-ல் ஏற்பட்டது. உடன்பாட்டின் நிபந்தனை

களின்படி, தொழிலாளர்கள் 21—3—1972-லிருந்து வேலைக்குத் திரும்ப வேண்டும், தொழிலாளர்களுக்கு 5—2—1972 நிலவரப்படி கொடுக்கப்படும் ஊதியத்தில் 20 சதவீதம் தற்காலிக உயர்வு 21—3—1972லிருந்து கொடுக்கப்பட வேண்டும்; வேலைச் சுமையை முடிவு செய்யும் பிரச்சனை சென்னை உற்பத்தித்திறன் குழுவின் முடிவிற்கு விட்டுவிடப்பட வேண்டும்; மேற்சொன்ன குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் மேற்கொண்டும் சமரசப் பேச்சு வார்த்தைகள் தொழிலாளர் நல அதிகாரி முன்னிலையில் நடத்தப்பட வேண்டும்; தொழிற்சாலைகள் சட்டத்தின் விதித்துறைகளைச் செயல் படுத்துமாறு தங்கள் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்துவதாகவும், வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டதற்காகத் தொழிலாளர்களைப் பழி வாங்குவதில்லை என்றும் நிர்வாகப் பிரதிநிதிகள் ஒப்புக் கொண்டனர்.

E.S.I. Hospital, Coimbatore.

* 140. *Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) the number of beds provided at the E.S.I. Hospital, Coimbatore ; and

(*b*) the number of beds sanctioned at the time of construction of the Hospital ?

கோவை ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கோவை ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் எவ்வளவு படுக்கை வசதிகள் உள்ளன?

(இ) மருத்துவ மனை கட்டப்படுகிறபோது எவ்வளவு படுக்கை களைக் கொண்டதாக கட்டுவதற்கு அனுமதி தரப்பட்டது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) 300 படுக்கை வசதிகள் உள்ளன.

(இ) 500 படுக்கைகள் கொண்டதாகக் கட்டுவதற்கு அனுமதி தரப்பட்டது.

திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, அனுமதி வழங்கப் பட்ட ஐநூறு படுக்கைகளையும் பெறுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுமா? மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா?